முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் திருமங்கலம் கள்ளிக்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே கடவிற்கு மாற்றாக 38 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "வீரபாண்டிய கட்டபொம்மன் சாலை மேம்பாலம்" திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, அ.வெங்கடேசன், எம். பூமிநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில்'ஹஜ்' திட்டம் - தொடர்ந்து நல்ல முறையில் செயல்படுகிறது!

சட்டப் பேரவையில் – அமைச்சர் சா.மு.நாசர் விளக்கம்!

சென்னை, பிப்.22

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் , "ஹஜ் திட்டம் தமிழ்நாட்டில் தொடர்ந்து சிறப்பான முறையில் செயல் படுகிறது!" என்று குறிப்பிட்டார்.

அவர் பேசியதாவது :

எதிர்க்கட்சித் தலைவர் உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலைப் பதிவு செய்திருக்கிறார்.

ஜெருசலேம் பயணம் நிறுத்தப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கு போர் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான்.

அடுத்து, ஹஜ் பயணம். ஹஜ் பயணம் சென்ற 5,600 பேர் சிறப்பான முறையிலே தங்கியிருந்து வந்திருக்கிறார்கள்.

'இதுவரைக்கும் நாங்கள் செல்லாத அளவிற்கு, இந்த 4 ஆண்டுகாலமாக, நாங்கள் பாதுகாப்போடு சென்று பாதுகாப்போடு திரும்பி வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஏற்பாடு செய்த தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்' என்று அவர்கள் கண்ணீர் மல்கச் சொன்னதை நீங்களும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். ஆகவே, உண்மைக்கு புறம்பான தகவலை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பதிலளித்தார்.

குமரி விஜயகுமார் - டாக்டர் யாழனி ஆலோசனை வழங்குகின்றனர்!

சென்னை தென் மேற்கு மாவட்ட திமுக சார்பில் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பயிற்சி பாசறை கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை பிப் 22:

தென்சென்னை மாவட்டம் திமுக சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம் இன்று 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கவிஞர் பாரதிதாசன் சாலை, சென்னை மாநகராட்சி சமுகநல கூடத்தில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமையில்,

மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி, கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ். முரளி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் குமரி விஜயகுமார் டாக்டர் யாழனி பயிற்சி ஆலோசனை வழங்குகின்றனர்.

பானுசலீம், கவிதா குமரி முத்து, அ.ரேவதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் , மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, பகுதி,வட்ட மகளிர் அணி நிர்வாகிகள் அனைத்து வாக்குச்சாவடி சார்ந்த வெல்லும் தமிழ் பெண்கள் பிரச்சாரம் மேற்கொள்வோர் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அகல்யா விஸ்வநாதன், ஏ.குமாரி ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

பொருள் பிப்ரவரி 23ஆம் தேதி முதல் மார்ச் 8 வரை வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாகப் பரப்புரை குறித்து என மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதியில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, ஒவ்வொரு பாகத்திலும் உள்ள மகளிர் படை உறுப்பினர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து இல்லந்தோறும் சென்று பரப்புரை செய்வது குறித்த செயல்திட்டத்தினை விளக்கிடும் பயிற்சிக்கூட்டம் பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமையில் நடைபெற்றது. இதில் டாக்டர் யாழினி, கழக த.ரமேஷ், த.ஜெகதீசன், பொ.த.எழில்வாணன், எம்.ஏ.சங்கர், பொ.த.மதிவாணன், கே.என்.தாமோதரன், த.பார்த்திபன், ஜி.பி.எஸ்.பாலசதீஷ், தே.கோபி, எஸ்.முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நே.சிற்றரசு தலைமை! மா.பா.அன்புதுரை முன்னிலையில்

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி பொறியாளர் அணி பி.மனோஜ் குமார் திருமண விழா!

ஆ.இராசா எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – கோவி.செழியன் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை வாழ்த்துரை!

சென்னை, பிப்.22-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி பொறியாளர் அணி பகுதி துணை அமைப்பாளர் பி.மனோஜ் குமார் - திவ்யா திருமண விழா சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை முன்னிலையில் இன்று (22.02.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 6.00 - 7.30 மணியளவில் பசும் பொன் தேவர் கல்யாண மண்டபம், அபிபுல்லா சாலை, தி.நகர், சென்னை - 17 என்ற முகவரியில் நடைபெறுகிறது.

தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ். ராஜ், திருமலை பொன்னுரங்கம் எம்.சி., மாவட்ட அமைப்பாளர் பொறியாளர் அணி ச.அசோக் குமார் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

விழாவில் ஆ.ராசா எம்.பி., கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தாயகம் கவி எம்.எல்.ஏ., தொகுதி மேற்பார்வையாளர் சைதை சாதிக், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், தலைமை கழக வழக்கறிஞர் கே.ஜெ.சரவணன், எம்.செந்தில்குமார், எம்.பாண்டியன், டபள்யூ. தாஸ், டி.ஜெயக்குமார்,

வட்டக் கழக நிர்வாகிகள் எம்.டி.மணிபாலன், ஜெ.சிவலிங்கம், சி.வினோத்குமார், எஸ்.பத்மா செல்வம், ஏ.சதாசிவம், எஸ்.சரவணன், எஸ். சுரேந்தர், ஆர்.ஷர்மிளா, எஸ்.சதீஷ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

பகுதி பிரதிநிதி ஜி.ஜி.ரகு, வட்ட பொருளாளர் எஸ்.சுந்தரேசன், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி. மணி மாறன், பி.ஆகாஷ் குமார் நன்றி கூறுகின்றனர்.

அன்புடன் அழைக்கும் 117 "அ" வட்ட செயலாளர் தேனா எல்.தவமணி